# தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு

## முன்னுரை (Introduction)

கற்போருடைய அனைத்துவகை கற்றல் முன்னேற்றங்களை உள்ளடக்கிய கற்போரின் பள்ளி சார் மதிப்பீடே தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டுக் கருவிகளின் மூலம் ஒட்டுமொத்த வளர்ச்சியின் மதிப்பீடு மற்றும் நடத்தை வெளிப்பாடு, பயன்பாடுகளின் வகை மற்றும் வெற்றி, ஒருவருடைய கற்றல் பாடப்பொருள் அடங்கிய தொடர் மதிப்பீட்டின் வழியே கற்போரின் முன்னேற்ற தொகுப்பு பதிவு (profile) வழங்கப்படுகிறது.

முதலாவதாக, 'தொடர்' என்பது கற்போருடைய விரிசிந்தனை கூறுகளுடைய வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தின் மதிப்பீடு மற்றும் மொத்த கற்றல் கற்பித்தலில் உள்கட்டமைக்கப்பட்டுள்ளதாக அமைந்திருப்பதே தொடர் மதிப்பீட்டின் முக்கியத்துவம் ஆகும். மேலும் இது ஒட்டுமொத்த கல்விப் பிரிவில் பரவியிருக்கிறது. ஒவ்வொரு மாணவனையும் முறையான மதிப்பீட்டிற்கு உள்ளடக்குவது ஆகும். கற்றல் இடைவெளிகளைக் கண்டறிந்து அதற்கு குறைதீர் கற்றலைக் கொடுக்க இந்த மதிப்பீடு உதவுகிறது.

இரண்டாவதாக, 'முழுமை' என்பது கற்றல், முறை மற்றும் முறைசாரா வகையில் அமைய வேண்டும் என்பதையும், பல்வேறு நிலைகள் உடைய செயல்பாடுகள் மற்றும் கற்போருக்குத் தேவையான கற்றல் தொகுப்புகளை உள்ளடக்கியதாகவும், பல்வேறு கற்றல் சூழலில் மதிப்பிட வேண்டும் என்பதையும் விளக்குகிறது. வெவ்வேறு வகையின் செயல்பாடுகளின் வழியே முழுமையான மதிப்பீடு கற்றல் வெளிப்பாட்டினை உறுதிப்படுத்துகிறது. எனவே பல்வகை மதிப்பீட்டுக் கருவிகளின் மதிப்பீட்டின் வழியே முழுமையான மதிப்பீடு அமைகிறது. ஒவ்வொரு மாணவனுடைய முழுமையான கற்றல் வரைபடத்தை தெளிவாக தெரிந்து கொள்ள முழுமையான மதிப்பீடு உதவுகிறது.

## தொடர் மற்றும் முழுமையான மதிப்பாய்வின் நோக்கங்கள்
## (Objectives of Continuous and Comprehensive Evaluation)

- ஒரு மாணவனின் அறிவுசார்களம், உடலியக்க சார்களம் மற்றம் உணர்ச்சிசார்களம் போன்றவைகளை மேம்படுத்தி அவனது ஒட்டு மொத்த வளர்ச்சியை மேம்படுத்துதல்.
- மாணவர்களிடம் சிந்தனை சார்ந்த தொடர் செயல்பாடுகளை ஏற்படுத்தி அதன் மூலம் வெறும் மனப்பாடம் செய்தலை தவிர்த்தல்.
- கற்றல் - கற்பித்தல் தொடர் செயல்பாடுகளில் மதிப்பாய்வை ஒருங்கிணைத்தல்.
- தொடர்ச்சியான கால இடைவெளியில் மதிப்பாய்வு செய்தலை பயன்படுத்தி கற்றல் குறைபாடுகளை கண்டறிந்து அதற்கு ஏற்றவாறு, கற்பித்தலை மாற்றி அமைத்தல்.
- கற்றல் - கற்பித்தலின் தரத்தை நிர்ணயிக்கும் கருவியாக மதிப்பாய்வை அமைத்து கல்வியின் தரத்தை மேம்பாடு செய்தல்.
- மதிப்பாய்வை சமூகத்தின் பயன்பாடாக செய்தலினை நிர்ணயம் செய்யவும் அதன் விளைவு பயனைக் கொண்டு கற்பவர், கற்றல் செயல்பாடுகள் மற்றும் கற்றல் சூழல் போன்றவைகளை தீர்மானம் செய்தல்.
- கற்பவர் மைய கற்றல்-கற்பித்தல் செயல்பாட்டை அமைத்தல்.

## தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டின் முக்கியக் கூறுகள் (Features)

- பல்வேறு வகையான கருவிகள் மற்றும் உத்திகளின் வழியாக தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு நிகழமுறைகளைக் கொண்டது.
- விரிந்த மற்றும் கற்போரின் அனைத்து வகை வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.
- இது கற்போரை பயமுறுத்துவதாக அமையாமல் அர்த்தமுள்ள கலைத்திட்ட பாடப்பகுதியின் சிறுபகுதிகளை மதிப்பிடுதலின் வழியே கற்போருடைய மன அழுத்தத்தை குறைப்பதற்கு உதவுகிறது.

- கல்விசார் மற்றும் கல்வி இணைக் கூறுகள் இரண்டையும் உள்ளடக்கிய பள்ளிசார் மதிப்பீடு ஆகும்.
- ஒரு பருவத்தில் முழுமையான கற்றல் பாடவேளைகளில் அனைத்து கல்விசார் பாடங்களின் மதிப்பீடுகளை கட்டமைப்பதாக தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டின் கல்விசார் கூறுகள் (Scholastic Component) உள்ளது.
- மதிப்பீட்டின் சமவாயப்பில் (scope) உள்ள உடற்கல்வியை உள்ளடக்கியதாக உள்ளது.
- வளரறி மதிப்பீடு மற்றும் தொகுத்தறி மதிப்பீடுகளின் வழியே இது செயல்படுத்தப்படுகிறது.
- தரப்படுத்தப்பட்ட, குறையறி மற்றும் குறைதீர் கற்றலின் அடிப்டையில் வளரறி மதிப்பீடு உள்ளது.
- ஆசிரியர்கள் மற்றும் கற்போருக்கு பின்னூட்டம் வழங்குகிறது.
- வளரறி மதிப்பீட்டில் கற்போருடைய அடைவுத் தொகுப்பு பதிவை (profile) மதிப்பிட விளக்கக் குறியீடுகள் பயன்படுகின்றன.
- தொகுத்தறி மதிப்பீடு, ஒரு பருவத்தின் முடிவில் அனைத்து கல்விசார் பாடப்பகுதிகளுடைய முறையான மற்றும் விதி அடிப்படையிலான (Norm-based Assessment) மதிப்பீட்டை உள்ளடக்கியது.
- அநேக முறைசார் மற்றும் முறைசாரா வளர்ச்சி கூறுகளான வா வியல் திறன்கள், மனப்பான்மைகள், மதிப்புகள், நன்னலம், சேவை செயல்பாடுகள் மற்றும் பணிக் கல்வி ஆகியவற்றின் மதிப்பீடே கல்வி இணை மதிப்பீடு ஆகும்.

**தொடர் மற்றும் முழுமையான மதிப்பாய்வின் செயற்பணிகள்**
**(Functions of Continuous and Comprehensive Evaluation)**

- விளைவு பயன் மிக்க கற்பித்தல் யுக்திகளை அமைக்க ஆசிரியருக்கு உதவுகிறது.
- மாணவர்களின் திறன்களின் வளர்ச்சியின் போதும் கற்றல் அடைவு நடைபெறும் போதும் மதிப்பாய்வு செய்கிறது.
- மாணவர்களின் கற்றல் குறைபாடுகளை உடனுக்குடன் கண்டறிந்து அவர்களது கற்றல் சார்ந்த பலம் மற்றம் பலவீனங்களையும் அறிந்து குறைநிவர்த்தி செய்ய ஆசிரியருக்கு உதவுகிறது.
- உடனடியான பின்னூட்டம் கிடைப்பதால் ஆசிரியர் தனது கற்பித்தலால் ஏற்படும் விளைவுகளை அறிந்து உடனடியான குறை நிவர்த்திக்கும் உதவுகிறது.
- மாணவர்களுக்கு தங்களது கற்றல் சார்ந்த பின்னூட்டங்கள் கிடைப்பதால் தங்களது சுயஆய்வுக்கு உதவுகிறது.
- மாணவர்களுக்கு தங்களது உண்மையான மற்றும் விரிவான கற்றல் மதிப்பாய்வை அறிந்து கொள்ள ஏதுவாக இருப்பதால் கற்றலுக்கான ஊக்கத்தை கொடுகிறது.
- நல்ல படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவதால் கற்றலை மேம்படுத்த உதவுகிறது.
- மாணவர்களது விழுமங்களின் அமைப்புக்கு ஆரம்ப முதலே சரியான திசைப்படுத்துவதால் தவறான பழக்கங்கள் மற்றும் மதிப்பீடுகள் அவர்களது மனதில் பதிவுகளாக அமைத்து நன்மை புரிகிறது.
- மாணவர்களது நாட்டங்களை (Aptitude) மதிப்பாய்வு செய்வதால் எதிர்காலத்தில் என்ன வகையான மேற்படிப்பு தொடரலாம் என்று கணிக்க உதவுகிறது.
- மாணவர்களது உடல், மனம், சமூகம், நுண்ணறிவு மற்றும் கலாச்சாரம் சார்ந்த ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு உதவுகிறது.
- மாணவர்களின் கல்வி மற்றும் கல்வி இணை செயல்பாடுகள் சார்ந்த முழுமையான அமைப்பை கொடுத்து உதவுகிறது.
- பெற்றோர், ஆசிரியர், மாணவர்கள் மற்றும் கற்றல் சூழல் போன்றவைகளில் ஒரு ஒருங்கிணைப்பை ஏற்படுத்த உதவுகிறது.

**கல்விசார் மதிப்பீடு (Scholastic Assessment)**

- கற்போரின் அறிதல், புரிதல், பகுப்பாயதல் மற்றும் பாடப்பொருளைப் பயன்படுத்தும் நிலைகளுக்கேற்பப் பல்வகை மதிப்பீட்டு உத்திகளையும், நுட்பங்களையும் கொண்டு கலைத்திட்டத்திலுள்ள அனைத்துக் கல்விசார் பாடங்களில் மாணவர்களின் கற்றல் திறன்களைப் பருவம் முழுவதும் மதிப்பீடு செயதலாகும்.
- பாடப்பொருளைச் சிறுசிறு பகுதிகளாகக் கற்பித்துக் குறிப்பிட்ட இடைவெளிகளில் மதிப்பிடுதல் வாயிலாக மாணவர்களிடையே உள்ள அச்சத்தையும் மன அழுத்தத்தையும் குறைக்க வழிவகை செயகின்றது.
- பல்வேறு மதிப்பீட்டு நுட்பங்களைக்கொண்டு மாணவர்களின் கற்றல் அடைவுகளை வளரறி மற்றும் தொகுத்தறி மதிப்பீடுகள் வாயிலாக மதிப்பிடுதலாகும்.
- இதில் உடற்கல்வியும் மதிப்பீடு செயப்படுகிறது.

கல்விசார் மதிப்பீடு என்பது, கற்போரின் அறிதல், புரிதல், பகுப்பாயவு மற்றும் பயன்படுத்தும் திறனை மதிப்பீட்டு உத்திகள்மூலம் அளவிடுவதாகும். கல்விசார் செயல்பாடுகளை வளரறி மதிப்பீடு மற்றும் தொகுத்தறி மதிப்பீடு என இருவகையில் மதிப்பிடலாம்.

**வளரறி மதிப்பீடு – Formative Assessment (FA)**

வளரறி மதிப்பீடு என்பது, மாணவர்களின் கற்றலைக் கல்விசார் மற்றும் கல்வி இணைச்செயல்பாடுகளைப் பள்ளிச்சூழலிலும் வகுப்பறையிலும் பல்வேறு கற்றல் சூழலிலும் ஆசிரியர் தொடர்ந்து மதிப்பீடு செயவதாகும்.

**வளரறி மதிப்பீடு முக்கியக் கூறுகள் (Features)**

- பாடம் கற்பிக்கும் போதே மதிப்பீடு செயயக்கூடியதாக அமைந்துள்ளது
- குறையறிதல் மற்றும் குறைதீர் கற்பித்தல் இதனுள் அடங்கும்
- இவ்வகை மதிப்பீட்டில் தொடர்ச்சியான பின்னூட்டத்தை ஆசிரியருக்கும், மாணவருக்கும் கிடைக்கும் வகையில் இது தனியாளுக்கும், குழுவிற்கும் இடையே உள்ள இடைவெளியை குறைத்து, இணைக்கும் பாலமாக உள்ளது. மேலும் கற்றலை மேம்படுத்துவதற்காக, கற்றல் விளைவுகளின் மீது எதிரொளிக்க பயன்படுகிறது.
- வகுப்பறையில், கற்றல் செயல்பாடுகள் மதிப்பீடு மற்றும் கருத்துப் பரிமாற்றத்திற்கு வழிவகுக்கிறது.
- தன்னுடன் பயிலும் மாணவர்களுக்குக் கற்றலில் ஆர்வத்தைத் தூண்டுகிறது.

**தொகுத்தறி மதிப்பீடு – Summative Assessment (SA)**

தொகுத்தறி மதிப்பீடு என்பது, மாணவரின் கல்விசார் கற்றலடைவை எழுத்துத் தேர்வு வாயிலாகப் பருவ இறுதியில் மதிப்பீடு செயவதாகும். இம்மதிப்பீடு, வினாத்தாள் திட்டவரைவின்படி கற்றல் நோக்கங்களை வெளிக்கொணருமாறு அறிதல், புரிதல், பொருளறிதல், பயன்படுத்தல், பகுத்தாயதல், மதிப்பிடுதல், படைப்பாற்றல் ஆகியவற்றின் அடிப்படையில் அமையும்.

**தொகுத்தறி மதிப்பீடு முக்கியக் கூறுகள் (Features)**

- வினாத்தாள் திட்ட வடிவமைப்பின்படி பருவ இறுதியில் நடத்தப்பெறும் எழுத்துத் தேர்வாகும்.
- அறிதல், புரிதல், பயன்படுத்தல், பகுத்தாயதல், மதிப்பிடுதல், படைப்பாற்றல் அடிப்படையில் அமையும்.
- மாணவரின் கற்றல் அடைவுக்குச் சான்றளிக்கும் வகையில் அமையும்.
- காலவரையறைக்கு உட்பட்டதாகும்.

**ஊடற்கல்வி (Physical Education)**

கல்விசார் மதிப்பீட்டின் ஒரு பகுதி உடற்கல்வியாகும். ஆசிரியர் உடற்கல்வி பாடத்தை மதிப்பீடு செயது, தரம் மற்றும் மதிப்பெண் பதிவேட்டில் குறித்தல் வேண்டும். மேலும் இதனை மாணவர்களின் திரள் பதிவேட்டிலும் குறித்தல் வேண்டும்.

- உடல் தகுதி
- தான்தொடங்காற்றல் மற்றும் உடற்கல்வியில் ஆர்வம்
- விளையாட்டு அல்லது தடகள நிக வில் செயல்திறன்
- விளையாட்டு விதிகளைப் பின்பற்றுதல்
- விளையாட்டு வீரருக்குரிய தகுதிகள் பெற்றிருத்தல்

**கல்வி இணைச் செயல்பாடுகள் (Co- Scholastic Assessment)**

கல்விஇணைச் செயல்பாடுகள் என்னும் முறைசாரா கற்றல் செயல்பாடுகள், சாரம் போல் அமைந்து பங்கேற்றல் மற்றும் செயதுகற்றல் வாயிலாகக் கற்றல் அனுபவங்களை மாணவர்களிடம் கொண்டு சேர்க்கின்றன. கல்வி இணைச் செயல்பாடுகள், மாணவர்களிடம் ஆரோக்கியமான மனஎழுச்சிப் பதிவுகளை ஏற்படுத்துகின்றன. இச்செயல்பாடுகள், மாணவர்களைத் திறமையுள்ளவர்களாகவும், தன்னம்பிக்கை உள்ளவர்களாகவும், முழு ஆளுமை வளர்ச்சி பெற்றவர்களாகவும், சமூகத்திற்குத் தம் பங்களிப்பை அளிக்கவல்ல குடிமக்களாகவும், அனைத்திற்கும் மேலாகத் தாம் கற்ற கல்வியை மேலும் வலுப்படுத்தவும் துணைபுரிகின்றன. பாட கலைத் திட்ட செயல்பாடுகளின் போதும் அல்லது மொழி, கணிதம், அறிவியல், சமூக அறிவியல் மன்றங்களிலும், விழாக்கள், நிகழச்சிகள், கூட்டங்களை உள்ளடக்கிய நிகழவுகளிலும் அனைத்துப் பாட ஆசிரியர்களாலும் கல்வி இணைச் செயல்பாடுகள் நடத்தப்படுகின்றன.

கல்வி இணைச் செயல்பாட்டு வழிகாட்டு நெறிமுறைகளில் உள்ள விளக்கக்குறியீடுகளின் அடிப்படையில், கொடுக்கப்பட்ட வகுப்பை உடைய அனைத்துப் பாடங்களையும் கையாளும் ஆசிரியர்கள் ஒரு மாணவனை மதிப்பீடு செயது அதனை பொது தர பதிவேட்டில் பதிவு செயய வேண்டும். வாழவியல் திறன்கள், மனப்பான்மைகள் மற்றும் மதிப்புகள், நலம், சேவைச் செயல்பாடுகள் மற்றும் வாழக்கைக் கல்வி போன்ற கல்வி இணைச் செயல்பாடுகள் உள்ளன.

**தரப்படுத்தும் அமைப்புகள்**

**(Grading Systems)**

கல்வி நிறுவனங்களில் தரப்படுத்துதல் என்பது தரப்படுத்தப்பட்ட அளவீடுகளைக் கொண்டு ஒரு பாட சம்பந்தமான அடைவுச் சோதனைகளின் மாணவர்களின் அடைவை பல்வேறு நிலைகளாகப் பிரித்து மதிப்பெண்களுக்கு பதிலாக A, B, C, D, E மற்றும் F என்ற எழுத்துக்களை அடையாளமாக வைத்து பிரித்தல் என்று கூறலாம். முதல் முதலில் இவ்வாறு அடைவை தரப்படுத்துதலை யேல் (Yale) பல்கலைகழகம் வழங்கியது. இவ்வகையாக தரப்படுத்துதலை 1) ஒப்புமை தரப்படுத்துதல் அல்லது சார்பு தரப்படுத்துதல் அமைப்பு மற்றும் 2) முழுமையான தரப்படுத்தல் அமைப்பு என வகைப்படுத்தலாம்.

**ஒப்புமை தரப்படுத்துதல் அமைப்பு**

**(Comparative Grading System)**

இந்தவகை தரப்படுத்துதலில் மதிப்பெண்கள் தரமாக மாற்றப்படுகிறது. இதில் மதிப்பெண்களுக்கு தகுந்த தரம் வழங்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, மிக அதிக மதிப்பெண்களைப் பெற்றுள்ள 5% மாணவர்கள் என்றால் A கிரேடும் அதற்கு அடுத்த படியாக உள்ள மாணவர்களுக்க B கிரேடும் கொடுக்கப்பட்டு வரிசையாக F வரை தரப்படுகிறது. எனவே. இந்த கிரேடு அமைப்பில் மாணவர்களின் கிரேடுகள் அவர்கள் மற்ற மாணவர்களோடு ஒப்பிட்டு வழங்கப்படுகிறது. ஒரு மாணவனின் மதிப்பெண் மற்ற மாணவர்களின் மதிப்பெண்களோடு ஒப்பிட்டு கிரேடு வழங்கப்படுகிறது.

**முடிவுரை (Conclusion)**

கல்விச் செயல்பாடுகளுள் தமிழ, ஆங்கிலம், கணக்கு, அறிவியல், சமூக அறிவியலுடன் முன்னோடி நாடுகளுக்கு இணையாக உடற்கல்வியும் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளது. கல்வி இணைச் செயல்பாடுகளுள் வாழவியல் திறன்கள், மனப்பான்மைகள், மதிப்புகள், நலக்கல்விச் செயல்பாடுகள், சேவைச் செயல்பாடுகள், கலைக்கல்வி, வாழக்கைக் கல்வி போன்றவை இணைக்கப்பட்டுள்ளன. மாணவரின் கல்விச் செயல்பாடுகளின் வழியாக மதிப்பிடப்படும் பாடஅறிவு மட்டுமின்றி, கல்வி இணைச் செயல்பாடுகளின் வழியாக வெளிப்படும் சமூக அறிவும் இணைத்து மதிப்பிடப்படுகின்றன. இதனால், மாணவர்களின் அனைத்துத் திறன்களையும் கண்டறிந்து ஊக்குவிக்கும் வாயப்பு கிட்டுகிறது; மாணவர்களின் ஆளுமை வளர்ச்சியை முழுமையாக அறிய முடிகிறது. இளந்தலைமுறையினரை ஆளுமைமிக்கவர்களாகவும், தன்னம்பிக்கை உடையவர்களாகவும், வருங்காலத்தை வடிவமைப்பவர்களாகவும் உருவாக்க இயலும். இந்தியாவின் முன்னேற்றம் நான்கு சுவர்களுக்குள்ளே உருவாகிறது